# உலகில் கிறிஸ்தவ வரலாறு:

## ஒரு மறுவாசிப்பு



யோ. கி. போல் றொகான்

# உலகில் கிறிஸ்தவ வரலாறு:
# ஒரு மறுவாசிப்பு


| | |
|---|---|
| ஆசிரியர்: | அருட்கலாநிதி யோ.கி. போல் றொகான் |
| மொழி: | தமிழ் |
| விடயம்: | இறையியல், வரலாற்றுவாதம் |
| முதற் பதிப்பு: | கார்த்திகை, 2020 |
| பக்கங்கள்: | xxiv + 161 |
| வெளியீடு: | நல்லாயன் நிலையம் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம்), திருநெல்வேலி |
| உரிமை: | வெளியீட்டாருக்கு |
| அச்சகம்: | ஜே. எஸ். அச்சகம், பண்டத்தரிப்பு |
| விலை: | ரூபா 300/- |
| ISBN: | 978-624-96945-0-7 |


# History of Christianity in the World:
# A Rereading


| | |
|---|---|
| Author: | Rev. Dr. J.C. Paul Rohan |
| Language: | Tamil |
| Subject: | Theology, Historicism |
| First Publication: | November, 2020 |
| Pages: | xxiv +161 |
| Publisher: | Good Shepherd Centre (Catholic Chaplaincy of the University of Jaffna), Thirunelvely |
| Copy Right: | To the Publisher |
| Printer: | J.S. Printers, Pandatharippu |
| Price: | Rs. 300/- |
| ISBN: | 978-624-96945-0-7 |

# முகவுரை

உலக வரலாற்றில் பல நாகரிகங்கள் தோன்றி மறைந்தன. பல வல்லரசுகள் உருவாகி அழிந்தன. பல சமயங்கள் உருவாகி, காலப்போக்கில் தாம் உருவான புவியியல் மற்றும் கலாசார எல்லைகளுக்குள் தம்மை வரையறுத்துக் கொண்டன. உலகில் செல்வாக்குச் செலுத்துகின்ற ஒரு நாகரிகமாகவும், பலம் வாய்ந்த நிறுவன அமைப்பாகவும், பெரும்பான்மைச் சமயமாகவும் சமகாலத்தில் விளங்கும் கிறிஸ்தவம், அதற்கிணையாக எந்தவொரு நாகரிகமோ, அமைப்போ, சமயமோ இல்லை என்று கூறுமளவிற்கு உலக வரலாற்றில் தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது. மிகச் சிறிய இயக்கமாக, ஏழ்மை நிறைந்த, எந்தவித ஆடம்பரங்களும் மேட்டிமைகளுமற்ற சாதாரண ஆரம்பத்தைக்கொண்ட கிறிஸ்தவம் வரலாற்றில் உருவான எந்த நாகரிகமும், வல்லரசும், அமைப்பும், சமயமும் கண்டிராத மகத்தான வளர்ச்சியை அடைந்து, இரண்டாயிரம் ஆண்டுகளைக் கடந்தும் தனது இருப்பை நிலைநிறுத்தியுள்ளது. அது உலகிற்கு அறிமுகமான காலம் முதல் இன்றுவரை ஓர் உறுதியான, துரிதமான பரிணாமத்திற்கூடாகச் சென்று இன்று ஒரு பல்பரிமாண நிலையைப் பெற்றிருக்கின்றது.

கிறிஸ்தவம் பலஸ்தீனாவில் உள்ள நாசரேத்தூரைச் சேர்ந்த இயேசுவைப் பின்பற்றுபவர்களின் ஒரு குழுவாக உருவெடுத்தது. அதன் ஆரம்பத்தில் இருந்து ஏறத்தாள மூன்று நூற்றாண்டுகள் வரை அது ஒரு சமயம் என்ற முழுமையான அந்தஸ்தைப் பெற்றிருக்கவில்லை. உரோமையரின் ஆட்சிக்குட்பட்டிருந்த அக்காலப் பலஸ்தீனத்தின் அரசியல், சமய, சமூகப் பின்னணியில் கணிப்பில் எடுக்குமளவிற்கு பெருங்கவனத்தைப் பெற்றிராத மிகச் சிறியதாக இருந்த அந்தக் 'கிறிஸ்து இயக்கம்' இயேசுக்கிறிஸ்துவின் சிலுவைக்கொலையுடன் கலைந்து போனது என்றும் கூறலாம். அந்த இயக்கத்தின் தலைவராக நியமிக்கப்பட்ட பேதுரு கலிலேயக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருக்கையில் இயேசுக்கிறிஸ்துவால் அழைக்கப்பட்டவர்.

(மத்தேயு 4:19) இயேசுக்கிறிஸ்துவின் சிலுவைக்கொலைக்குப் பின்னர் ஒருமுறை பேதுரு கலிலேயக் கடற்கரையில் நின்றுகொண்டு "நான் மீன்பிடிக்கப் போகிறேன்" என்று மீண்டும் தனது பாரம்பரியத் தொழிலுக்குச் செல்லமுனைந்தமையை யோவான் தன் நற்செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (யோவான் 21:3) இது இயேசுக்கிறிஸ்துவின் இறப்பின் பிற்பாடு அந்தக் 'கிறிஸ்து இயக்கம்' கொண்டிருந்த விரக்தியின் உச்சத்தை வெளிப்படுத்துவதாகப் பொருள் கொள்ளலாம். அப்படியான நம்பிக்கையற்ற நிலையில் இருந்து, இயேசுக்கிறிஸ்துவின் உயிர்ப்பு உறுதிப்படுத்தப்பட்டுத் தூய ஆவியும் பொழியப்பட்ட நிலையில் அந்தக் 'கிறிஸ்து இயக்கம்' புதுப் பொலிவு பெற்று மிடுக்கோடு தன் பயணத்தை ஆரம்பித்தது. ஸ்தேவானின் படுகொலையைத் தொடர்ந்த யூதக் கலாபனைகள் அது தோன்றிய இடமான பலஸ்தீனாவிலிருந்து அதனைச் சிதறடித்து ஐரோப்பா மற்றும் இந்தியா உட்பட ஆசியாவின் பல பகுதிகளுக்கு வேகமாகப் பரவ வழிவகுத்தன. மூன்று நூற்றாண்டுகால அவலங்களுக்குப்பின் கி.பி.313இல் உரோமைப் பேரரசன் கொன்ஸ்ரன்ரைன் கிறிஸ்தவத்தோடு செய்து கொண்ட மிலான் நகர உடன்படிக்கைக்குப் பிற்பாடு உரோமைய அங்கீகாரத்தைப் பெற்று, உரோமைப் பேரரசிற்கு இணையாக வளர ஆரம்பித்தது. உரோமைப் பேரரசின் உத்தியோகபூர்வ சமயமாக மாறியதுடன், பேரரசின் மக்களின் வாழ்க்கையில் பெரும் செல்வாக்கைச் செலுத்தியது. உரோமைப் பேரரசின் எல்லைகளுக்கு அப்பாற்சென்று கிட்டத்தட்ட முழு ஐரோப்பியக் கண்டத்தையும், வட ஆபிரிக்காவையும், ஆசியாவின் சில பகுதிகளையும் அரசியல், பொருளாதார, சமூக, சமய, கலாசார ரீதியாக வியாபித்தது. நவீனகாலம் உருவாக்கிய ஐரோப்பியக் குடியேற்றவாத அலைகளோடு அமெரிக்கா, ஆபிரிக்கா, மற்றும் ஆசியாவின் பிற பகுதிகளுக்கும் பரவியது.

ஐரோப்பாவில் தன்னை நிலை நிறுத்தி அதன் கலாசாரக் கட்டமைப்புக்குள் ஊடுருவிய கிறிஸ்தவம், இயேசுக்கிறிஸ்துவின் அன்புக் கலாசாரத்தை மையப்படுத்திய ஒரு புதிய நாகரிகத்தை

அறிமுகஞ்செய்தது. ஏற்கனவே மிலான் நகர உடன்படிக்கைக்குப் பிற்பாடு உரோமையரின் படிமத்தலைமைக் கட்டமைவை (hierarchical structure) உள்வாங்கி தன்னைப் பலமான ஒரு நிறுவனமாக உருவாக்கியிருந்த கிறிஸ்தவம் சமயம், நிறுவனம், கலாசாரம் என்ற முப்பரிமாண நிலையில் உலகில் தனது இருப்பை உறுதி செய்தது.

கிறிஸ்தவம் அறிமுகப்படுத்திய புதிய நாகரிகம் ‘கிறிஸ்தவ’ என்ற சமய அடைமொழியுடன் அழைக்கப்பட்டாலும், அதற்கு முன்னர் புகழ் பெற்று விளங்கிய கிரேக்க, உரோமைய உலகியல் நாகரிகங்களுக்கு ஈடாக அனைத்து உலகியல் அம்சங்களையும் தன்னகத்தே உள்ளடக்கி வினைத்திறனுடையதாகவும், ஜனரஞ்சகமானதாகவும், அனைவரையும் தன்பால் ஈர்ப்பதாகவும் வளர்ந்தது. கிறிஸ்தவம் பரவிய இடங்களில் எல்லாம் கல்வி, கலை, இலக்கியம், அறிவியல் உட்பட்ட எல்லாத்துறைகளிலும் பங்களிப்புச் செய்து அவற்றை மேம்பாடடைய வழிவகுத்தது. விஞ்ஞானத் தொழில்நுட்பங்களை உலகிற்குப் பொருத்தமான முறையியல்களினூடாக அறிமுகஞ்செய்த பல விஞ்ஞானிகள் கிறிஸ்தவத்தால் உருவாக்கப்பட்டவர்கள். மேலும் அறிவியல் கோட்பாடுகளை உலகிற்கு வழங்கி உலகை மேம்பாடடைய வழிவகுத்த மேதைகள் பலரும் கிறிஸ்தவத்தால் உருவாக்கப்பட்டவர்கள். இவ்வாறாக இன்றைய நிலையில் உலகின் வளர்ச்சி நிலைக்கு கிறிஸ்தவம் வழங்கிய பங்களிப்பு வேறு எந்த நாகரிகமும், நிறுவனமும், சமயமும் வழங்காத அரும்பெருந் தன்மை பொருந்தியதாகவே சிலாகிக்கப்படுகிறது.

இத்தகைய நீண்ட, பெருமிதங் கொள்ளக் கூடிய கிறிஸ்தவத்தின் வரலாறானது மிகச் சிறிய ஆரம்பத்தில் இருந்து பாரிய வளர்ச்சியைப் பெற்றது என்பது கண்கூடு. கிறிஸ்தவம் பற்றி முன்வைக்கப்படும் இந்த வரலாறு, சாதகமான நோக்கில் ஒரு வெற்றி வரலாறாகவே கணிக்கப்படுகிறது. வெற்றியின் இலக்கணங்கள் என்று கூறப்படும் பெரும்பான்மை, செல்வாக்கு, அதிகாரம், கட்டுப்பாடு போன்ற உலகநியமங்களின் அடிப்படையில் நோக்கில் கிறிஸ்வ வரலாற்றை வெற்றி

வரலாறு அன்றி வேறுவிதமாகக் கூறமுடியாது. இது வெற்றியை மதிப்பீடு செய்யும் ஒருமைநோக்கு வரலாற்றுவாதத்தின் விளைவாகும். மனித வரலாற்றில் ஈட்டப்பட்ட வெற்றிகளை அவற்றின் தோற்றப்பாடு, எண்ணிக்கை போன்றவற்றின் அடிப்படையில் மட்டும் அலசிப்பார்ப்பதே ஒருமைநோக்கு வரலாற்றுவாதமாகும். சமகால வரலாற்றுத் திறனாய்வாளர்கள் இத்தகைய ஒருமைநோக்கு வரலாற்றுவாதத்திற்கு எதிரான தமது எதிர்ப்புக்களை நியாயப்பூர்வமாகவும் கருத்தியல் ரீதியாகவும் முன்வைத்து வருகின்றார்கள். வரலாற்றின் வெற்றிகளைத் திறனாய்வு செய்வதற்கு இதுவரை பயன்பட்ட அளவறிநிலை (quantitative), தோற்றப்பாட்டியல் (phenomenal) போன்ற ஒருமைநோக்கு முறைகள் பொருத்தமற்றதெனவும், பண்புநிலை (qualitative), ஆழ்நிலை உணரல் (noumenal / transcendental) ஆகியனவும் இணைந்த புதுமையான பன்மைவாத முறையியல் நெறிகள் வரலாற்றின் வெற்றிகள் பற்றிய ஒரு புதியபார்வையை முன்வைக்க அவசியமானவை என்று எடுத்துக்காட்டப்படுகின்றது. பழைய ஒருமை நிலைப் போக்குகள் கிறிஸ்தவத்தின் தோற்றம், வளர்ச்சி, பரவல் ஆகியவற்றை எப்போதும் வெற்றிநிலை நோக்கியதாகவே முன்வைக்கும் தன்மையுடையன.

ஆயினும் கிறிஸ்தவத்தின் வெளிப்படு தன்மைகளுக்கப்பால் அதன் உள்ளார்ந்த இயல்பு, அதன் நிறுவுனரான இயேசுக்கிறிஸ்துவின் கனவு, அவர் உலகிற்கு அறிவித்த நற்செய்தியின் சாராம்சம் ஆகியவற்றை மையப்படுத்திக் கிறிஸ்தவத்தின் வரலாற்றை ஆத்மார்த்த ரீதியாக ஆய்வுக்குட்படுத்தும் போது மேற்சொல்லப்பட்ட வெற்றி வரலாறு என்பது பொருத்தமற்றது என்பதைச் சமகாலத்தைய சமூகவியல், மானிடவியல், பல்சமயமரபியல் போன்ற பன்மைத்துவ நெறிகளினூடான தேடல்கள் முன்வைக்கின்றன. இத்தகைய பல்துறைசார் அணுகுமுறைகள் எய்தப்பட்ட வெற்றியின் தன்மை, அதை அடையப் பயன்படுத்திய வழிமுறைகள் பற்றிய தெளிவை ஏற்படுத்தும். இத் தெளிவுகள் வெற்றிகள் பற்றிய யதார்த்தக் கண்ணோட்டத்தை உருவாக்கும்.

உலகில் கிறிஸ்தவத்தின் இருப்பும் அதன் வரலாறும் வெற்றி என்று சில விமர்சகர்களும், தோல்வி என்று சில விமர்சகர்களும் விவாதம் செய்வர். நவீனத்துவ, பின்நவீனத்துவப் பின்னணியில் இரண்டாவது சாராரே பெரும்பான்மையாக உள்ளமை மறுக்கப்பட முடியாத உண்மை. வெற்றிபெற்றவர்களும், பெரும்பான்மையானவர்களும் உருவாக்கியதே வரலாறு என்பது கிறிஸ்தவத்திற்கும் பொருந்தும் என்றும், அந்த மாயையான வெற்றி வரலாற்றைச் சிலாகித்து, வெற்றிக்களிப்புகளில் மூழ்கியிருக்கும் கனவான்களுக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுக்கும் திறனாய்வு இறையியல்கள் இதனடிப்படையில் உருவாகி வருகின்றன.

இப்பின்னணியில் சமகால கல்விப்புல உலகம் உருவாக்கித்தந்த பல்துறைசார் முறையியல்களின் அடிப்படையில் உலகில் கிறிஸ்தவத்தின் இருப்பையும், அதன் வரலாற்றையும் ஒரு மறுவாசிப்புச் செய்ய இந்நூல் முனைகிறது. கிறிஸ்தவத்தின் நீண்ட கால இருப்பில் அதனது சமய வரலாறோடு இணைந்ததாக உலக வரலாற்றின் பல மர்மமான முடிச்சுக்களும் அதனைச் சுற்றிப் பின்னிப்பிணைந்துள்ளன. கிறிஸ்தவம் தனது உலக வரலாற்றில் இருண்ட பக்கங்களினூடாகச் சென்றது என்பதும், அதனது கரங்கள் கறைகள் படிந்தன என்பதும் அதனது வரலாற்றின் மறுவாசிப்பு புலப்படுத்தும் உண்மையாகும். இவ் உண்மை கசப்பானதாக இருப்பினும் யதார்த்தமானது. ஆயினும் உலக மனச்சான்றின் பாதுகாவலனாக கிறிஸ்தவம் தொடர்ந்தும் விழிப்புடன் இருக்க வேண்டும் என்ற ஆதங்கமும் இம்மறுவாசிப்புக்கான அவசியத்தை ஏற்படுத்துகிறது.

கிறிஸ்தவம் ஓர் இறை - மனித சங்கமத்தின் உறைவிடம். கிறிஸ்தவத்தின் வரலாற்றில் அதன் மனிதக்கூறுகள் (human elements) காலத்துக்குக் காலம் மேலெழுந்து அதன் வரலாற்றைக் கொச்சைப்படுத்திக் கறைப்படுத்தியிருந்தாலும், அதனுள் உறையும் இறைக்கூறுகள் (divine elements) மீளவும் அதனைப் புதுப்பித்தமையை அதன் வரலாற்றின் மறுவாசிப்புக்கள் உறுதிப்படுத்துகின்றன. இப்பின்னணியிலேயே கிறிஸ்தவத்தின் வரலாறு இந்நூலிலும் ஒரு மறுவாசிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

இதன் மூலமாகக் கிறிஸ்தவத்தின் நடைமுறை மேம்பாட்டுக்கான ஒரு கோட்பாட்டு உசாவல் மேற்கொள்ளப்படுகிறது.

* * *

இறையியலில் சமகாலச் செல்நெறியாகத் துரிதமாக வளர்ந்து வரும் பல்துறைச் சங்கம ஆய்வுகளில் துறைபோன பேராசிரியர் அமுது ஜோசவ்வாஸ் சந்திரகாந்தன் அவர்கள் இந் நூலுக்கு அணிந்துரை வழங்கிச் சிறப்பித்துள்ளார். வரலாற்றின் பிழையான கற்பிதங்களையும், மாயைகளையும் தனது இறையியல் ஆய்வுகளில் காத்திரமாக வெளிக்கொணர்ந்து மனிதத்தையும், மானிட மரபுகளையும் காத்திடப் போராடும் ஒரு முற்போக்கு இறையியலாளன் இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியிருப்பது இந்நூலில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட கிறிஸ்தவம் பற்றிய ஆத்ம சோதனை நிறைந்த மறுவாசிப்புக்கும், கோட்பாட்டு உசாவலுக்கும் மேலதிக வலுச்சேர்ப்பதாக அமைந்துள்ளது. நான் சார்ந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிறிஸ்தவ நாகரிகத்துறைக்குத் தகுந்த கல்விப்புலம் சார்ந்த சிந்தனைச் செல்நெறியை உருவாக்கிய சிற்பியும், அதன் முதற் தலைவருமான அவர் தனது தொடர்ந்த ஆக்கபூர்வமான ஈடுபாட்டை துறையின் வளர்ச்சியில் காட்டி வருகின்றார். அதன் ஒரு வெளிப்பாடே இந்நூலின் முதற்பகுதியில் இடம்பெறும் அவரது கூற்றுக்கள். அவருக்கு எனது பெருமிதமிக்க நன்றிகள்.

* * *

மானிடமையமான மக்கள் இறையியலை உருவாக்குவதில் என்றும் சளைக்காது, இன்றும் போராடிவரும் இறையியல் பேராசான் பேராசிரியர் S.J. இம்மானுவேலுக்கு இந்நூல் சமர்ப்பணமாகிறது. இறையியல் கற்கையில் தனது மூர்க்கமான திறனாய்வுகளால் மாணவர்களைக் கல்விப்புலரீதியில் ஆற்றுப்படுத்தி, திறனாய்வுச் சிந்தனைகளுக்குப் பயிற்றுவித்தவர். இந்நூல் முன்வைக்கும் கிறிஸ்தவ வரலாறு மீதான திறனாய்வு சார்ந்த மறுவாசிப்புக்கு அவர் கற்றுத்தந்த இறையியலும்,

பரிச்சயப்படுத்திய முறையியல் ரீதியான திறனாய்வுச் சிந்தனைகளுமே மூலதனங்களாகும். இந் நூலின் உள்ளடக்கமும், அதன் இலக்கும் அவருக்கே சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஒருவித கடப்பாட்டை இயல்பாகவே ஏற்படுத்துகிறது. அவருக்கு எனது கடப்பாடு நிறைந்த நன்றிகளோடு இந்நூலைச் சமர்ப்பிக்கின்றேன்.



அருட்கலாநிதி யோ.கி. போல் றொகான்
தலைவர்
கிறிஸ்தவ இஸ்லாமிய நாகரிகத்துறைகள்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்
இலங்கை.